# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | O.S.No. 50 of 2013 | **DW - 1** | **:** | Cross-continuation |
| **Name** | மாதவன் | **Father Name** | **:** | வரதப்பன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 26.03.2026 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் – 12.38 PM**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. பி.வா.சா.ஆ.9 சான்றாவனத்தில் எந்த கிரைய ஆவணத்தின் மூலம் தங்களுக்கு பாத்தியப்பட்டது என்று கோவிந்தன் மற்றும் பழனி குறிப்பிட்டு கிரையம் செய்து கொடுத்துள்ளனரா என்றால் இல்லை கிரையம் மூலம் பாத்தியம் என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளனர். அந்த கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்களுக்கு மூல ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். அந்த திரையி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண் 21/2A–ல் கோவிந்தன் மற்றும் பழனி ஆகியோருக்கு பாத்தியம் இல்லை என்பதால் தான் அவர்களுக்கு பாத்தியப்பட்டதாக கூறும் கிரைய ஆவணத்தின் எண் குறிப்பிடப்படாமல் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த சர்வே எண்ணில் 36 சென்ட் சொத்தை கிரையம் எழுதிக் கொடுக்க கோவிந்தன் மற்றும் பழனிக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, அவர்களுக்கு உரிமை உள்ளது. அவ்வாறு உரிமை இல்லாத காரணத்தால் தான் மூல பதிவு ஆவணங்கள் குறிப்பிடப்படாமல்

மோசடியாக பி.வா.சா.ஆ.9 தயார் செய்யப்பட்டுள்ளது அதனால் அது செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

2. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை 3–ம் பிரதிவாதி மைனர்களாக இருந்த வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் சார்பாக எழுதிக் கொடுக்க அவருக்கு உரிமை இல்லை அவ்வாறு எழுதிக் கொடுத்த அந்த ஆவணமும் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. அந்தக் கிரையை ஆவணத்திலும் அண்ணாமலைக்கு அந்த சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல சொல்லப்பட்டுள்ளது. அண்ணாமலைக்கு அந்த சொத்து எந்த வகையில் பாத்தியம் என்றால் அவருக்கு பிதுரார்ஜிதமாய் பாத்தியப்பட்டது, அவர் தந்தையுடன் சேர்ந்து எங்களுக்கு ஒப்பந்தம் எழுதிக் கொடுத்த வகையிலும் பாத்தியப்பட்டது. ஆவண எண். 504/1993 என்ற கிரைய ஆவணம் எங்களுக்கு ஏதாவது தொடர்பு உள்ளதா என்றால் அதற்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை.

3. எங்களுக்கு கிரையம் கொடுத்துள்ள அண்ணாமலை அவருக்கு ஆவண எண். 504/1993–ன் படி பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்ட ஏதாவது சொத்தை கிரயம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. தாவா சொத்துகளுக்கு உரிமையே இல்லாத கோவிந்தன், அண்ணாமலை, பழனி ஆகியோர் சொத்துக்களை விற்பனை செய்ய எந்த உரிமையும் இல்லை அவ்வாறு அவர்கள் விற்பனை செய்த ஆவணங்களைக் கொண்டு நாங்கள் எந்த உரிமையும் கோர முடியாது அது வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல அவர்கள் உரிமையோடு தான் விற்பனை செய்தார்கள். தாவா சொத்துக்கள் வாதிக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும்

உயில் மூலம் பாத்தியப்பட்ட சொத்து அதில் வாதிக்கு 3-ல் 1 பாக உரிமை உள்ளது, அதை நான் மறுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல, உயில் எழுதியவர் இறக்கும் சமயத்தில் அவருக்கு எந்த சொத்தும் பாத்தியப்பட்டதாக இல்லை. வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர் பாகம் பிரித்து அனுபவம் செய்ய இடையூறாக இருந்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வாதிக்கு நான் செலவுத்தொகை மற்றும் நஷ்டஈட்டுத் தொகை செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.

**முடிவு நேரம் – 12.58 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- XXXXX

District Munsif(FAC),
Uthangarai.